உடன்படிக்கை எண்: 755 நாள்: 14.09.2008

# புரிந்துணர்வு ஒப்பந்தம்

அனைத்து தேசங்களின் பல்கலைக்கழகக் கல்லூரி,
கோவோரிடுவா, கானா,
மேற்கு ஆப்பிரிக்கா

மற்றும்
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்,
இந்தியா

இவற்றிற்கிடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம்.

இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் 2008-ஆம் ஆண்டு செப்படம்பர் 14-ஆம் நாள் ஒன்றாம் கட்சியாகிய அனைத்து தேசங்களின் பல்கலைக்கழகக் கல்லூரி, (இனிமேல் அ.தே.ப. என்று குறிக்கப்படும்) இரண்டாம் கட்சியாகிய மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, தமிழ்நாடு, இந்தியா (இனிமேல் ம.சு.ப. என்று குறிக்கப்படும்) ஆகிய இரண்டு நிறுவனங்களுக்கு இடையில் கல்வி சார்ந்த உறவுகளை நிறுவுவதற்காக செய்யப்பெற்றது. இந்தக் கல்விசார் உறவு நான்கு பகுதிகளைக் கொண்டது. ம.சு.ப.வின் on-site கல்விசார் திட்டங்களை அ.தே.ப. நடைமுறைப்படுத்தும்.

## 1. படிப்பின் வளர்ச்சி

* முனைவர் பட்டம் உட்பட்ட இளநிலை, முதுநிலை பட்டப்படிப்புகளுக்காகவும், மாணவர் பயிற்சிக்காகவும் ம.சு.ப. பாடத்திட்டம் மற்றும் சோதனைக்கூட வளர்ச்சியில் அ.தே.ப –வுக்குத்துணை செய்யும்.

* இது மாணவர்கள் பரிமாற்றத்தையும் உள்ளடக்கியது.

## 2. ஆராய்ச்சியில் இணைந்து செயல்படுதல்

* இணைந்து செயல்படுத்தும் ஆய்வுத் திட்டங்கள் ஊக்குவிக்கப்படும். அத்தகைய ஆய்வுத்திட்டங்கள் ஒரு மனதாக ஒத்துக்கொள்ளப்படுபவற்றின் அடிப்படையில் செயல்படுத்தப்படும். புரிந்துணர்வு நிறுவனங்களின் ஆர்வத்தைப் பொறுத்து தேவைப்படும் போது களங்கமில்லாமல் வெளியீடுகள், தரவுகள் மற்றும் பிற கற்பிக்கும் உபகரணங்கள் போன்றவை பரிமாறிக் கொள்ளப்படும்.

## 3. புல பயிற்சி

* ம.சு.ப. பொருத்தமான சிறப்பு பயிற்சித் திட்டங்களின் அ.தே.ப. புலத்திற்கும் பணியாளர்களுக்கும் துணை செய்யும்.

* மேற்குறித்து ம.சு.ப. ஆசிரியர்கள் அ.தே.ப. – விற்கு வருகை தருவதன் மூலம் ஊக்குவிக்கப்படும்.

## 4. சான்றிதழாக்கம்

* அ.தே.ப. — வின் சான்றிதழ், பட்டயம் மற்றும் பட்டங்களுக்கு ம.சு.ப. தனது பெயரையும், சின்னத்தையும் கடனாக வழங்கும்.

* On-site — திட்டங்களையும், கல்விசார் உறவோடு தொடர்புடைய செயல்பாடுகளையும் நடைமுறைப்படுத்தும்போது ஏற்படும் நிதித்தேவைகள் ஒரு மனதாக ஒத்துக்கொள்ளப்பட்ட ஒதுக்கீடுகளின் அடிப்படையில் அமையும். இயன்றவரையில் இத்திட்டங்கள் அனைத்தும் ம.சு.ப.—விற்கு நிதிச்சுமை ஏற்படாத வகையில் அமைய வேண்டும்.

* இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் இரண்டு நிறுவனங்களும் கையெழுத்திட்ட நாளிலிருந்து ஐந்து ஆண்டுகளுக்குச் செல்லத்தக்கதாகும். இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் அ.தே.ப.—வும், ம.சு.ப.—வும் இணைந்து கலந்தாய்வு செய்து முடிவெடுப்பதின் மூலம் செயல்படுத்தப்படும். இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தை எவ்வகையிலான விளம்பரத்திற்குப் பயன்படுத்தும்போதும், இரு நிறுவனங்களும் தமக்குள் ஆலோசனை பெறல் வேண்டும்.

* இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் காலாவதியாகும் நாளிற்கு முன்னர் இரு நிறுவனங்களுக்கிடையிலான எழுத்து மூலம் அறிவிக்கப்பெற்ற கலந்தாய்வு அல்லது ஒப்பந்தத்தின் மூலம் எப்பொழுது வேண்டுமென்றாலும் முறித்துக் கொள்ளலாம். அத்தகைய எழுத்து வடிவிலான அறிவிப்பு கட்டாயமாக குறைந்தபட்சம் ஒப்பந்த முறிவு நாளுக்கு ஆறு மாதங்களுக்கு முன்பு வழங்கப்பட வேண்டும்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9